**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 133/2019** நாள் 03.04.2024

வாசா.1, திருமதி.விஜயா (எ) நாச்சியார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1ம் வாதி என் உடன் பிறந்த மூத்த அக்கா என்றால் சரிதான். 1ம் வாதிக்கு வயது 80. நான் உடன் பிறந்தவர்களில் 4 வது என்றால் சரிதான். எனக்கு வயது 65. 1ம் வாதிக்கு அடுத்து பிறந்தவர் 1ம் பிரதிவாதி குத்தாலிங்கம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி லட்சுமணனுக்கு வயது 77 என்றால் சரிதான்.1ம் வாதிக்கு திருமணம் முடிந்து சுமார் 60 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். 1965 ல் அவரது திருமணம் நடந்திருக்கும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் முடிந்து சுமார் 55 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி லட்சுமணனுக்கு திருமணம் நடைபெற்று சுமார் 45 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்றது 1980 ம் வருடம் ஆகும். எனக்கு திருமணத்திற்கு எத்தனை சவரன் நகை போட்டார்கள் என்றால் 10 சவரன் நகை போட்டார்கள். 1ம் வாதிக்கு திருமணத்திற்கு எத்தனை சவரன் நகை போட்டார்கள் என்றால் நான் அப்போது சின்னகுழந்தை எனக்கு ஞாபகமில்லை. திருமணத்தின் போது எனக்கு 150 சவரன் நகையும் எனது அக்கா பொன்னம்மாளுக்கு (1ம்வாதி) 150 சவரன் நகையும் போட்டார்கள் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தன்னிச்சையாக 150 நகையெல்லாம் போடவில்லை. எனக்கு எனது தந்தை 50 சவரன் நகை போட்டார். நான் 2019 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் 1ம் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே இராஜபாளையத்தில் ஒரே தெருவில் தனித்தனியாக குடியிருந்தோம் என்றால் சரிதான். நான் திருமணம் முடிந்து எனது கணவருடன் இராஜபாளையத்தில் குடியிருந்தேன் என்றால் சரிதான். 1ம் வாதியின் கணவர் இராஜபாளையம் பூபதிராஜா கூட்டுறவு வங்கியில் மேலாளராக பணிபுரிந்தார். 1ம் வாதியின் கணவர் ராமசாமியின் தந்தை பெயர் பொன்னுரங்கம் என்றால் சரிதான். அருப்புக்கோட்டை ராமலிங்கம் மகன் வாத்தியார் பொன்னம்பலம் எனக்கு சித்தப்பா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். வழக்குரை பத்தி 4 ல் வழக்குரையில் கண்ட சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் லட்சுமண பெருமாள் மூப்பனார் அனுபவித்து வந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது ஒரே மகளான பொன்னம்மாள் அனுபவித்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பொன்னம்மாள் எனது பாட்டி என்றால் சரிதான். எனது பாட்டி பொன்னம்மாளுக்கு எனது தந்தை பொன்னம்பலம், எனது சித்தப்பா லட்சுமணபெருமாள் மற்றும் முத்துலட்சுமி ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பொன்னம்பலம் , லட்சுமணபெருமாள் மற்றும் முத்துலட்சுமி மேற்படி பொன்னம்மாள் அனுபவித்து வந்த சொத்துக்களை 06.12.1967 தேதியிட்ட பதிவு

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் மூலமாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகத்தில் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் தான் தற்போது பாகம் கேட்கிறேன் என்றால் சரிதான். நான் மொத்தம் 24 சொத்துக்களில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 20 வது அயிட்ட சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. 20 வது அயிட்ட சொத்தின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியாது. 5 வது அயிட்ட சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 22 வது அயிட்ட சொத்தின் சர்வே எண் , கிராமம் நான்கு எல்லை ஆகிய விவரங்கள் எனக்கு தெரியாது. நான் வழக்கில் காட்டியுள்ள சொத்துக்களின் சர்வே எண் , கிராமம் நான்கு எல்லை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே வழக்கு சொத்துக்களை வாய்மொழியாக பாகம் செய்து சீட்டு குலுக்கிபோட்டு 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் 1995 ல் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாட்சி தன்னிச்சையாக அவ்வாறு கொடுத்ததாக சொல்லிகொள்கிறார்கள் என்கிறார். எனது அப்பாவிற்கு முதலில் எப்போது அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அப்போது சென்னையில் இருந்தேன். நான் எனது அப்பாவுடன் போனில் பேசுவேன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு எந்த மருத்துவமனையில் எங்கு வைத்து அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் தெரியாது. எனது அப்பா தினமும் செய்யும் வரவு செலவு கணக்குகளை ஒரு நோட்டில் எழுதி வைப்பார் என்றால் சரிதான். எனது அப்பா விவசாயம், நூல் வியாபாரம் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவும் அம்மாவும் தனியாக இராஜபாளையத்தில் கதவு எண் 45 ல் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பா தனக்கு வேண்டிய செலவுகளை தானே பார்த்துகொள்வார் என்றால் சரிதான். நான் ஒருபோதும் எனது அப்பாவை ஆள்வைத்து பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 28.10.2002 அன்று 1,2 பிரதிவாதிகள் வாய்மொழியாக பிரித்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் குடும்ப ஏற்பாடு ஆவணம் எழுதிகொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் அவ்வாறு எழுதிகொண்டதாக சொன்னார்கள். 1,2 பிரதிவாதிகள் தங்களுக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்களை அவரவர் பிள்ளைகளுக்கு தானமாக எழுதிகொடுத்தார்கள் என்றால் அவ்வாறு சொன்னார்கள். ஒரு காலத்திலும் வழக்கு சொத்துக்களை நாங்கள் கூட்டாக அனுபவித்தது இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனவே வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வாசாஆ-12 முதல் வாசாஆ-18 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தங்களுக்கு பாகத்தில்

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

கிடைத்த சொத்துக்களை அனுபவித்து வந்து தங்கள் மகன்களுக்கு தானமாக எழுதிகொடுத்து அவர்கள் அனுபவித்து வருவதால் அந்த சொத்துக்களில் பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 03rd day of April 2024.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.